# மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் – V

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.

காலம் :- 12.10.2015 காலை 9.00 மணி

சமுகமளித்தோர்:-

- செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- பிரதம கணக்காளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- உதவிச் செயலாளர், மாகாணக் கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், மா.க.திணைக்களம், வட மாகாணம்.
- வலயக் கல்விப் பணிப்பாளர்கள் (வலிகாமம், வடமராட்சி,தென்மராட்சி, தீவகம், முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு,மடு)
- பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பொறியியலாளர், பாடசாலை வேலைகள் பிரிவு, கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- கணக்காளர்கள்(கல்வி அமைச்சு, யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, தீவகம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய்,வவுனியா தெற்கு,மன்னார், மடு )
- பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு, யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, கிளிநொச்சி,முல்லைத்தீவு, துணுக்காய், மடு)
- உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், மன்னார்)
- நிர்வாக உத்தியோகத்தர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம்)
- பாடசாலை வேலைகள் பரிசோதகர்கள்
- தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்.
- நிதி உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு.

செயலாளர், கல்வி அமைச்சு அவர்கள் இன்று ஐந்தாவது மாகாணக் கல்வி அபிவிருத்திக் கூட்டத்தை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். அந்த வகையில் கூட்டத்திற்கு வருகைதந்த மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை வேலைகள் பிரிவு பொறியியலாளர்கள், கணக்காளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றுக்கொண்டு குறிப்பாக இன்று இங்கு இந்தியத் துணைத்தூதர் ஸ்ரீமான். நடராஜன் அவர்களும் அவருடன் திரு.பிரபாகர் அவர்களும் வருகை தந்துள்ளார்கள். அவர்களை வரவேற்றுக் கொண்டு சித்திரப் போட்டியொன்று (Art Competition) நடத்துவதற்கு தீர்மானித்துள்ளார்கள். அதன் விபரங்களை அவர்கள் தெரிவிப்பார்கள்.

அடுத்து இந்தியத் துணைத் தூதர் ஸ்ரீமான்.நடராஜன் அவர்கள் உரையாற்றினார். அவர் சித்திரப் போட்டி தொடர்பாக விளக்கமளித்தார். போட்டி நவம்பர் மாதம் 14 ஆந் திகதி நடைபெற்று போட்டி முடிவுகள் அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதம் வெளியிடப்படும்.

- WFP Programme இனால் நடத்தப்படும் சித்திரப் போட்டி ஒன்றும் நடத்தப்படவுள்ளது. அது தொடர்பாகவும் மாணவர்களிற்கு அறிவித்து அதில் பங்குபற்றச் செய்தல் வேண்டும்.
- சென்ற கூட்ட அறிக்கையினை வாசித்து அதனுடைய முன்னேற்றங்களை பார்க்கலாம்.
- அடுத்து முன்னேற்ற அறிக்கை தொடர்பில் பார்க்கலாம். மொத்தமாக 323Mn நிதியிலிருந்து Imprest 86Mn எடுக்கப்பட்டுள்ளது.அதில் செலவினம் (Expenditure) 84 Mn ஆக காணப்படுகின்றது.
- PSDG திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டது.
- அடுத்து TSEP வேலை தொடர்பில் ஆராயப்பட்டது.
- பூர்த்தி செய்யப்பட்ட தொழிநுட்ப ஆய்வுகூடங்களை விரைவாக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி செயலாளர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

❖ அடுத்து திட்டமிடல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

- 5 Year Plan தரச்சொல்லி கேட்டும் இதுவரை அனுப்பிவைக்கப்படவில்லை.
- AIP 2016 ஆம் ஆண்டு திட்டமானது உடனடியாக தரப்படல் வேண்டும். பாதீட்டில் உள்ளடக்குவதற்கு அதனை விரைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.
- பிரதேச செயலக ரீதியாக இரண்டு பாடசாலைகள் தெரிவு செய்தல் தொடர்பாக பாடசாலைகளை தெரிவு செய்து விரைவாக அனுப்புதல் வேண்டும்.
- கோட்ட ரீதியாக ஆரம்பப் பாடசாலை இரண்டையும் ஆகக்குறைந்தது ஒன்றினையும் தெரிவு செய்தல் வேண்டும்.
- கௌரவ உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டில் வாங்கிய பொருட்களை அவர்களை கௌரவித்து அவர்களைக் கொண்டே ஒரு வைபவத்தின் மூலம் வழங்கப்பட வேண்டும்.
- சுற்றாடல் முன்னோடித் திட்டம் என்று ஒரு செயற்பாடு சில வலயங்களில் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

❖ அடுத்து நிர்வாக விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

- பாடசாலை விஜயம் தொடர்பாக எம்மால் அனுப்பப்பட்ட படிவத்தில் உள்ளவற்றை கோவையில் (Box File) இல் அனைத்தும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.

- உள்ளக மேற்பார்வை (internal supervising) தொடர்பில் பாடசாலைகளில் இருக்கவேண்டியவை தொடர்பில் அதிபர்களிற்கு தெரியாதுள்ளது.
- விஞ்ஞான ஆசிரியர்களிற்கு (தரம் 6–11 வரையான) ஒரு கருத்தரங்கு (Workshop) பல்கலைக்கழக வளவாளர்களைக் கொண்டு ஒழுங்குபடுத்தல் வேண்டும். அதற்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி) தொடர்பாளராக செயற்படவும்.

❖ அடுத்து பொது விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

- மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி ஒக்ரோபர் 31, நவம்பர் 1 ஆந் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவுள்ளது.
- மாகாண இலக்கிய விழா ஒக்ரோபர் 24 ஆந் திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.
- பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களிற்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு நவம்பர் 05 ஆந் பேரவைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.
- அதிபர்களிற்கான கருத்தரங்கு ஒன்று நவம்பர் 07 ஆந் திகதி நடைபெறவுள்ளது.

# பிரச்சினைகள், பிரேரணைகள் தொடர்பான கலந்துரையாடல்.

| இல | கலந்துரையாடப்பட்ட விடயங்கள் | தீர்மானம் | பொறுப்பு |
|---|---|---|---|
| 01. | வேலைத்தளத்தில் முன்னேற்றங்கள் குறைவாக இருப்பது தொடர்பாக | வேலைத்தளத்தில் முன்னேற்றங்கள் குறைவாக இருப்பதனால் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் வேலைத்தளத்தை (Site) பார்வையிட்டு வாராந்தம் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் சகல தொழிநுட்ப உத்தியோகத்தர்கள். |
| 02. | க.பொ.த(உ/த) வகுப்புக்களிற்கு செய்முறைப் பயிற்சி வழங்குவது தொடர்பாக | க.பொ.த(உ/த) வகுப்புக்களிற்கு செய்முறைப் பயிற்சி செய்வதற்கு பாட ரீதியாக குழுக்களை உருவாக்கியுள்ளோம். அவர்கள் பரீட்சை நோக்கில் பொருட்களை தயாரித்து தொண்டமனாறு வெளிக்கள நிலையத்திற்கு சமர்ப்பித்து தயார் செய்து மாணவர்களிற்கு வழங்கப்படும். உரிய பாட வேளைகளில் செய்முறைப் பயிற்சியினை செய்வதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வலயத்திலும் ஒரு பாடசாலையை தெரிவுசெய்து அப் பாடசாலைக்கு செய்முறைப் பயிற்சிக்குத் தேவையான பொருட்கள் வழங்கப்படும். அவ் வலயத்திலுமுள்ள எல்லா மாணவர்களும் செய்முறைப் பயிற்சிகளுக்கு அப் பாடசாலையைப் பயன்படுத்த முடியும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 03. | பதவியுயர்வு தொடர்பாக | பதவியுயர்வு தொடர்பாக அதிபர்களின், ஆசிரியர்களின் சம்பள நிலுவை தொடர்பான விபரங்களை தொகுத்து தரும்படி கேட்டிருந்தோம். அதனைப் பெயர்ப்பட்டியலுடன் சமர்ப்பித்தால் மாத்திரமே பிரதம செயலாளரிடம் சமர்ப்பித்து காசு எடுத்துத் தரப்படும். பதவியுயர்வுக் கடிதங்கள் வழங்கப்பட்ட ஆசிரியர்களிற்கு சம்பள மாற்றீடு (Salary Conversion) செய்து நிதிக் கிளைக்கு சமர்ப்பித்து சம்பள நிலுவையைக் கோர முடியும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (நிர்வாகம்) |
| 04. | இடமாற்றம் தொடர்பாக | இடமாற்றம் தொடர்பாக அதிபர்களின் இடமாற்றத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர்களின் இடமாற்றத்தினைச் சரியாகச் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் நிர்வாகப் பிரிவினர்களும் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு வந்து ஆசிரிய இடமாற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (நிர்வாகம்) |
| 05. | பரீட்சைகள் தொடர்பாக | பரீட்சைகள் தொடர்பில் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தவணைப் பரீட்சைகள் தரப்பட்ட அறிவுறுத்தலுக்கேற்ப நடத்தப்படும். இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் சித்திரப் போட்டி காரணமாக திட்டமிடப்பட்ட பரீட்சைத் திகதிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படுகின்றது. | |

இத்துடன் கூட்டம் பிற்பகல் 2.00 மணிக்கு கூட்டம் நிறைவு பெற்றது.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

இ.இரவீந்திரன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.